**செய்தி வெளியீடு எண்: 160** **நாள்: 28.02.2012**

## <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் துரித நடவடிக்கை காரணமாக, 26.2.2012 அன்று இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 22 பேரும் இலங்கை நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டு, நாளை (29.2.2012) தமிழகம் அழைத்து வரப்பட உள்ளனர்.

25.2.2012 அன்று ராமநாதபுரம் மாவட்டம், ராமேஸ்வரம் மீன்பிடித் தளத்திலிருந்து, மீன்பிடி விசைப் படகுகளில் தமிழக மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றனர். 26.2.2012 அன்று கச்சத்தீவு அருகில் மீன்பிடித்துக் கொண்டிருந்த 22 தமிழக மீனவர்களை, அவர்களது 5 படகுகளுடன் இலங்கை கடற்படையினர் கைது செய்து, இலங்கையிலுள்ள தலைமன்னாருக்கு கொண்டு சென்றதாக தகவல்கள் கிடைக்கப் பெற்றன.

இதனையடுத்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உத்தரவின்பேரில் உடனடியாக தமிழக அரசு, கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய தூதரகங்களை அணுகி, கைது செய்யப்பட்ட 22 மீனவர்களையும், அவர்களின் 5 படகுகளையும் உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தது.

இலங்கையில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகள் மூலமாக தமிழ்நாடு அரசு விடுத்த வேண்டுகோளினை ஏற்று, தலைமன்னார் நீதிமன்றம் 27.2.2012 அன்று 22 மீனவர்களையும், அவர்களின் 5 படகுகளையும் வழக்கு ஏதும் பதிவு செய்யாமல் விடுவித்தது. 5 படகுகள் உட்பட விடுவிக்கப்பட்ட 22 மீனவர்களும் இலங்கை கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர், அவர்களை இந்தியக் கடலோரக் காவல் படை நாளை **(29.2.2012)** தமிழகம் அழைத்து வரும்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள்: 28.2.2012